ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

वपुः प्रादुर्भावादनुमितमिदं जन्मनि पुरा
पुरारे न क्वापि क्वचिदपि भवन्तं प्रणतवान् ।
नमन्मुक्तस्सम्प्रत्यहमतनुरग्रेऽप्यनतिमान्
तदीश क्षन्तव्यं मम तदपराधद्वयमपि ॥ महिम्ने ॥

ஹே புராரே, திருபுரஸம்ஹாரம் செய்த ஹே பரமேசுவர! இப்பொழுது எனக்கு இந்தச்சரீரமேற்பட்டிருப்பதால் இதிலிருந்தும் நான் இவ்விதம் ஊஹிக்கிறேன். அஃதாவது-முன் ஜன்மத்தில் எப்பொழுதாகிலும் ஒரு ஸமயத்திலாவது உம்மை நான் நமஸ்கரிக்கவில்லை, இது தவறு. இப்பொழுது உமக்கு வந்தனம் செய்கிறவனான நான் இனிப்பிறப்பையடையாமல் முக்தனாக ஆய்விடுவேன். அந்த ஸமயமும் உம்மை வணங்கும்படியான பாஞ்சபௌதிகமானசரீரம் எனக்கு இருக்கப்போகிறதில்லை. ஆகையால் அக்காலத்தில் உம்மை வந்தனம் பண்ணுமலிருக்கும் அபராதம் ஒன்று. முற்பிறவியில் செய்யாத அபராதத்தையும் இதையும் சேர்த்தால் இரண்டு அபராதம் நான் செய்ததாகும். ஹே ஈச! சர்வ லோகங்களுக்கும் அதிபதியான மஹேச! என்னுடைய இந்த இரண்டு அபராதங்களையும் என்போன்றவர்களிடம் இயற்கையில் தங்களுக்கிருக்கும் கருணையால் மன்னித்து அனுக்கிரஹம்செய்யவேண்டுமாய் பிரார்த்திக்கிறேன்.

இதினால் ஸ்ரீ சந்திரசேகரரை எப்பொழுதாகிலும் ஒரு தடவை ஒரு நமஸ்காரம்செய்தால் உடனே அவர் முக்தனாகச்செய்துவிடுவார். அவ்விதம் சென்ற ஜன்மாவில் நாம் செய்யாத காரணத்தால் இம்மானிடப் பிறவியைப் பெற்றோம். இப்பொழுது அவருக்கு வந்தனம் செய்துவிட்டால் இனி இந்த ஸம்ஸாரதுக்கத்தை அடையாமலிருக்கும்படி முக்தர்களாகச்செய்துவிடுவார். ஆகையால் இப்பொழுதாகிலும் அந்தப் பிரபுவினிடத்தில் பக்தி செய்து ஜன்மஸாபல்யத்தையும் பெறவேண்டுமென்று அறிவிக்கப்படுகின்றது.

உபபத்திராதிபர்.

## காலத்தின் கொடுமை.

(௫௨-வது பக்கத்தொடர்ச்சி.)

அஃதாவது,

पिता रक्षति कौमारे भर्ता रक्षति यौवने ।
पुत्रस्तु स्थाविरे भावे न स्त्री स्वातंत्र्यमर्हति ॥

ஒருஸ்திரீயை பால்யகாலத்தில் பிதாவும், யௌவனகாலத்தில்பதியும், அதற்குப்பிறகு வயதானகாலத்தில் புத்திரன் முதலானவர்களும் ரக்ஷிக்கவேண்டும். இவள் எந்த ஸமயத்திலும் ஒருவருக்குள் அடங்கியிருக்கவேண்டுமேயன்றித் தன்னிஷ்டம்போல் உபன்யாசமேடையில் பிரஸங்கம் செய்வதும், மெம்பர் ஸ்தானத்தை அபேக்ஷிப்பதும், ஓட்டுக்கொடுக்க ஸ்வாதந்திரியம் வேண்டுமென்பதும், ராஜாங்கத்தில் அதிகார முறையைவகிப்பதும் ஒருக்காலும் இவர்களுக்குக் கூடாதென்று மனு ஸ்பஷ்டமாய் வெளியிட்டிருக்கிறார்.

இங்கு ஸ்திரீகளுக்கு விவாகமென்பது முதல் வார்ஸான பிதா செய்யவேண்டிய காரியம். அந்த விவாக ரூபகார்யத்தையும் நம்மிஷ்டம்போல் ஸௌகரியமான ஒரு ஸமயத்தில் செய்துகொள்வோமென்று நினைப்பதற்குக்கூட இடமில்லாமல் அவர்களே அதற்குரிய காலத்தையும் நன்கு நிரூபித்திருக்கிறார்கள்.

यावन्न लज्जते कन्या यावत्क्रीडति पांसुषु ।
यावत्तिष्ठति गोमार्गे तावत्कन्यां विवाहयेत् ॥

"கன்னிகையானவள் புருஷர்களைக்கண்டு லஜ்ஜையையடையாமல் எவ்வளவு காலம்வரையில் இருக்கிறளோ, வெளிவீதிகளில் எவவ் ளவு காலம்வரையில் மண்குவித்து விளையாடுகிறளோ, எவ்வ ளவு காலம்வரையில் மாடுகள் போகும்வழியில் நின்று வேடிக் கை பார்க்கிறளோ அந்தக் காலத்தில் அவளுக்கு விவாகத் தை நடத்திவிடவேண்டும்" என்று ஸம்வர்த்தரும்

प्रयच्छेन्नग्निकां कन्यामृतुकालभयात्पिता ।

பிதாவானவன் தன்கன்னிகைக்கு ருதுகாலம்வந்துவிடுமோவெனப் பயங்கொண்டு வஸ்திரம் தரித்துக்கொள்ள வேண்டும் என்று லஜ் ஜை ஏற்படுவதற்குள் விவாஹத்தைச் செய்யவேண்டும் என்று வஸிஷ்டரும்

विवाहं चोपनयनं स्त्रीणामाह पितामहः ।

புருஷர்களுக்கு உபநயனம் என்கிற ஸம்ஸ்காரம்போல் ஸ்திரீக ளுக்கு விவாஹம் என்கிற ஸம்ஸ்காரம் என்று பிதாமஹர் கருது கின்ருர். ஆகையால் ஏழாவதாண்டிலாகிலும் எட்டாவதாண்டி லாகிலும் ஸ்திரீகளுக்கு விவாஹம் நடத்துவதுதான் சிறந்தது என்று வியாக்கிரபாதரும் இவ்விதமே மனுமுதலிய இதா மஹ ரிஷிகளும் அபிப்பிராயப் பட்டிருக்கிருர்கள். இந்த முக்கியகா லத்தில் நடத்த முடியாவிட்டாலும் ருதுவாகிறதற்கு முன்னமே அவசியம் விவாஹத்தைச் செய்துவிடவேண்டும். அவ்விதம் விவா ஹத்தை நடத்தாமல் அவள் ருதுமதியாக ஆய்விட்டால் அவள் பிதாவுக்கு அதிகதோஷத்தையும் அவளைவிருஷளீ என்று நிந்தனை செய்தும், அவளைவிவாஹம் செய்யும் பிராமணனைச்சூத்திரன்என் றும் பலவாருய் நிந்தித்திருக்கிருர்கள்.

पितुर्गेहे तु या कन्या रजः पश्यत्यसंस्कृता ।
भ्रूणहत्या पितुस्तस्यास्सा कन्या वृषली स्मृता ॥ लघुशातातपः ॥
रजस्वला च या कन्या यदि स्यादविवाहिता ।
वृषली वार्षलेयस्स्यात् जातस्तस्यां सचैव हि ॥ आश्वलायनः ॥

எந்த ஸ்திரீ தன் பிதுருகிரகத்தில் விவாஹமாவதற்குள் ருதுமதி ஆகின்றளோ அவள் பிதா புருணஹத்தி செய்த பாபத்திற்குள்ளாகிறன்; அக்கன்னிகையும் விருஷளீயாகக் கருதப்படுகிறள். எந்த ஸ்திரீ விவாஹமில்லாதவளாய் இருக்கும் கன்யாவஸ்தையிலேயே ருதுமதியாகின்றளோ அவள் விருஷளீ என்றும் அவளிடம் ஜனித்த புத்திரன் வார்ஷளேயன் (சூத்திரியின் புத்திரன்) என்றும் ஆச்வலாயனர் அபிப்பிராயப் படுகின்றர். இம்மாதிரியான பிரமாணவசனங்கள் பலவிருப்பினும் விரிவிற்கஞ்சி இம்மட்டோடு நிறுத்துகிறேம். இதுவரை நிரூபித்த வசனங்கள் "ஸ்திரீகளுக்கு ருதுவாகிறதற்கு முன் அவசியம் விவாஹத்தைச் செய்யவேண்டும்" என்றும் அவ்விதம் செய்யாவிட்டால் அவள் சூத்திர ஸ்திரீ என்றும் அவளை மணம் புரிந்தவன் விருஷளீபதி என்றும் நிந்திக்கப்பட்டிருப்பதால் ருதுகாலத்திற்கு முன்னமேயே அவசியம் விவாஹம் ஸ்திரீகளுக்கு நடத்தவேண்டுமென்று ஏற்பட்டது. ருதுகாலம் இவ்வளவு வயதுசென்ற பிறகுதான் ஏற்படுமென்று ஒருவராலும் தீர்மானிக்கமுடியாது. பொதுவாய் 11 ஆவது முதல் 20 வயது வரையில் உள்ள காலங்களில் அந்தந்த சரீர அமைப்புக்குத் தக்கவாறு ஏற்படலாம். இக்கருத்தைக் கொண்டுதான் ஸம்வர்த்தர் முதலான மஹரிஷிகள் "எட்டாவது வயதில் கௌரீ என்றும், ஒன்பதாவது வயதில் ரோகிணீ என்றும் பத்தாவது வயதில் கன்னிகையென்றும் முறையே பெயர் கொடுத்து அதற்கு மேற்பட்டால் (अतऊर्ध्वं रजस्वला) "ருதுமதியாகக் கருத வேண்டும்" என்று கூறியிருக்கிறர்கள். இதனல் '10 வதாண்டு பூர்த்தியாகிறதற்குள் ஸ்திரீகளுக்கு விவாஹத்தை நடத்திவிடவேண்டும்' என்று நிச்சயமாய்த் தெரிகின்றது. இந்துக்களால் அனுஷ்டிக்கப்படும் தர்மங்களுக்கு முக்கிய ஆதாரமாயும் வெகு காலமாய் பல மஹான்களால் கையாளப்பட்டவையுமான தர்மசாஸ்திரங்கள் இவ்விதம் கூறுங்கால் இப்பிரமாணங்களைச்சற்றும் செவியுறமல் தமக்குத் தோன்றியவாறு 12 வயதுக்குப் பிறகுதான் விவாகம் நடத்தவேண்டும் என்று மசோதாவைத்தயாரித்து அதைச்சட்டமாக்க வேண்டி அரசாங்க சபைகளிலும் கொண்டுவந்து மற்றுமுள்ள மெம்பர்களையும் ஒருவர்

நிர்ப்பந்தித்தால் உலகத்திற்கு க்ஷேமத்தைச் செய்வதிலும், ஸநாதன தர்மங்களை விருத்திசெய்வதிலும் இவருக்கு எவ்வளவு ஊக்கமிருக்கிறதென்று இதனால் நன்கு புலப்படவில்லையா? காலதோஷத்தால் நழுவினவைபோக ஆங்காங்கு மூலைகளில் அற்பம் நடைபெறும் ஸநாதனதர்மத்தையும் அடியோடு நாசம் செய்து இன்னும் சகிக்கவியலாத கொடிய கஷ்டங்களை நம்தேசத்திற்குச் சீக்கிரம் உண்டாக்கவேண்டுமென்கிற எண்ணத்தைத்தவிர வேறு யாது பயன் கூறமுடியும்?

(தொடரும்)

உபபத்திராதிபர்.

---

# லிங்கஸ்வரூபவிசாரணை.

(௫௮-வது பக்கத்தொடர்ச்சி.)

சிவனால்தான் பிரபஞ்ச ஸ்வரூபத்தை அறியலாம். பிரபஞ்சத்தால் சிவனையறியமுடியாதென்றுமாயிற்று. ஏனெனில் தீபத்தால் பதார்த்தங்களையல்லாது பதார்த்தங்களால் தீபம் அறியத்தக்கதல்ல. ஆகவே சிவன் என்றால் ஸ்வரூபப் பிரகாசன் என்று பொருள். பிரபஞ்சம் என்பது ஜடவஸ்து. ஜடவஸ்துவுக்கு ஸ்வப்ரகாசமே கிடையாதென்பது யாவருமறிந்ததே. சிவனையும் பிரகாசப்படுத்துவது ஒன்று உண்டென்றால் சிவனென்று சொல்லமாட்டோம். ஜடப்பிரபஞ்சத்தினுட் சேர்ந்ததேயாகும். ஆகையால் சிவலிங்கம் என்றால் இப்போது சிவனாலறியப்படுவது என்று பொருள்தான் ஏற்பட்டது. இவ்விதம் அர்த்தம் கொள்வது உத்தமம்தான், ஆயினும் இம்மட்டோடு நாம் நின்று விடுவதற்கில்லை. ஏனெனில் ஸாமான்ய ஜனங்களும் சிவலிங்கமென்றால் கோவிலில் யாவராலும் தரிசிக்கப்பட்டு ஆராதிக்கப்படும் பிம்பத்தையல்லவா கூறுகின்றார்கள். அவ்விதமிருக்கும்போது முற்கூறப்பட்ட அர்த்தத்தோடு நாம் நிற்பதற்கில்லையே என்றாற்கூறுவாம் இங்கு **शिवस्य लिङ्गं** அதாவது சிவனுடைய லிங்கம் என்று கூறிவிடுவோம். இவ்விதம் அர்த்தம் கூறுவதிலும் இரண்டொருவழி

உண்டு. அதாவது சிவனுடையலிங்கம் என்று அர்த்தம் செய்து கொண்டு சிவனுடைய லிங்கமென்ருல் சிவஸ்வரூபத்தைக் காட்டு கிறதென்பதாகும். ஆகையால் அவனுடைய பிரகாசத்தால் எல்லாம் பிரகாசிக்கிறது என்றகருதிப்படி அவனுடைய அருளின் ஸ்வரூபத்தை வெளிப்படுத்தும் வேத வேதாந்த வித்தைதான் சிவலிங்கமென்றும் சொல்கின்றனர். சிலர் சிவனுடைய லிங்க மென்ருல் மாயை என்றும் அகங்கார மென்றும் ஜனங்களுடைய மனது என்றும் பிராணனென்றும் சரீரமென்றும் இவ்வாறே இன்னும் பலவழிகள் ஸூதஸம்ஹிதையில் விஸ்தரிக்கப் பட்டி ருக்கின்றன. இவைகளாலும் நமது அபீஷ்டம் நிறைவேறவில்லை யாதல்பற்றி இன்னும் சற்று மேற்செல்வோம். இன்னும் ஓர் சாரார் இந்த உலகமும்அதில் உள்ளதும் வரப்போகிற ஸமஸ்த மும்சிவலிங்கமென்கின்றனர். இதுநமக்குசற்றுப்பொருத்தமுடை யதெனலாம். ஏனெனில்முற்கூறியவாறுஉலகில் தோன்றும் பொ ருளெல்லாம் அவன் பிரகாசத்தால்தான் தெரியவேண்டியதால் எதையாம்காண்கின்ருேமோ அதெல்லாம்சிவப்பிரகாசம் என்று கொள்ள வேண்டிவருகிறபடியால் அவையனைத்தும்சிவலிங்கமே. இவ்வாறெல்லாம் பலவிதமாய்ப் புகழுவது சரியேயாயினும் நமது கதியென்னவெனலாம். இதை அவசியம் கவனிக்கவேண்டியது தான். ஆனல் நம்பெரியோர்கள் நம்மை அலக்ஷ்யம்செய்து தள்ளிவிடவில்லை. சற்று நம் விஷயத்திலும் வழி விட்டிருக்கின் றனர்.

संसारार्णवमग्नानामज्ञानान्धीकृतात्मनाम् ।
चित्तपाकानुगुण्येन भावनार्थं द्विजर्षभाः ॥
अनाधारस्य देवस्य शिवस्य परमात्मनः ।
आधारो मन्त्रसंस्कारात् कल्पितस्सत्यवद्बुधाः ॥

ஸம்ஸாரக் கடலில் மூழ்கி அக்ஞானமென்னுமிருளால் மூடப்பட் டவர்களின் மனதின் பரிபக்குவத்திற்கேற்றவாறு பாவனை செய் வதற்காக ஆதாரமற்ற பரமாத்மாவான சிவனுக்கு மந்திரஸம்ஸ் காரங்களால் உண்மைபோல் ஆதாரம் கற்பிக்கப்பட்டிருக்கிறது என்று ஸூதஸம்ஹிதையே கூறுகின்றது. ஆகவே இப்போது

தான் நமக்கு மடிப்பிச்சை விழுந்தது. இதனால்தான் நாம் சிவனேயோ விஷ்ணுவையோ வேறெந்த தெய்வத்தையோ பிரதிமை முதலியவைகளில் மந்திரஸம்ஸ்காரத்தால் பிரதிஷ்டை செய்து ஆராதிக்கின்றோம். இவ்விதம் ஆராதிக்கும் வழிகாட்டி நம் பரமாசார்யர்களும் கைலாயத்தினின்று லிங்கங்கள் கொண்டுவந்து ஆராதித்தும் ஆராதிக்கச் செய்தும் நம்மைக்கடைத்தேற்றியும் வருகின்றனர். ஆதல் பற்றியே தான்

**यतीनां योगिनां चैव बाह्योपरतिसक्तिषु ।**
**अन्तर्यागस्तु विहितो बाह्यपूजापरेषु च ॥**

உலகைவெறுத்த யதிகளுக்கும் அந்தர்யாகமென்னும் தியானம் ஏற்பட்டது. மற்றவர்களுக்கு இவ்விதம் பிரதிமைகளிற் பூஜை செய்யவேண்டியதுதான் என்றார். ஆகவே பிரதிமா பூஜையை நமக்கு ஏராளமாய் விதித்துவிட்டது. இதனால் சிவலிங்கம் என்றால் சிவனுடைய ஞாபகம் என்றதனால் பாணலிங்கம் முதலியவை சிவனை ஞாபகப்படுத்தி அதன் மூலம் நம்மை நன்மையைப் பயக்கச் செய்கிறது என்றாயிற்று. இப்படிச் சொல்வதில் **लिगि** என்ற தாதுவுக்கு **गति** என்று அர்த்தம் ஏற்படுகிறது **लिङ्गयति गमयति शिवं** என்று கூறுவார்கள். இனி **लिङ् श्लोषणे** என்ற அர்த்தத்தை வைத்து

**लयनाल्लिङ्गमित्याहुः अपरे मुनिसत्तमाः ।**

அதாவது சிவனிடத்தில் எல்லாம் அடங்குவதால்சிவலிங்கமென்று கொள்ளலாம் **शेतेऽस्मिन् सर्वं इति शिवः** சிவன் என்ற பெயருக்கே எல்லாவற்றையும் தனக்குள் லயப்படுத்திக்கொள்ளவதால் வந்ததென்கின்றனர். எங்கு எல்லாம் அடங்குகின்றனவோ என்று சுருதியும் கூறுகிறதால் சிவலிங்கமென்றால் உலகமனைத்தையும் தன்னுள் அடக்கிக்கொள்பவர் என்றுமாகிறது. இன்னும் சில யோகிகள் சிவலிங்கமென்றால் சிவனுடைய லிங்கம். லிங்கம் என்பதற்கு ஆதாரம் என்றும் பொருட்கொள்ளலாம். ஆகவே சிவனுடைய ஆதாரஸ்தானம் சிவலிங்கம் என்றாயிற்று. ஆதாரஸ்தானம் இச்சரீரத்தில் ஆறு இடங்களுள் சரீரத்தின் சரிமத்தியில் மூலாதாரம் மணிபூரகம்அனாகதம் ஆக்ஞா த்வாதசாந்தம் ஷோட

சாந்தம் என்பதே. இவ்வாறு ஸ்தானங்களும் சிவனுடைய முக்கியஸ்தானங்கள். நாபிக்குக் கீழ்மூலாதாரஸ்தானம். அங்குக் கணேசரூபமான சிவனையும் நாபி என்ற மணிபூரகஸ்தானத்தில் ஜகத்ஸ்ருஷ்டி ரூபரான பிர்மமூர்த்தியையும் ஹிருதயம் என்ற அனுகதஸ்தானத்தில் ஸத்வகுணமூர்த்தியாய் ஜகத்தைப் பரிபாலனம் செய்யும் விஷ்ணுமூர்த்தியையும் புருவங்களின் மத்தி என்ற ஆக்ஞாஸ்தானத்தில் தமோகுணோபாதியுள்ள ஸம்ஹாரமூர்த்தியானருத்திரனையும்,உச்சியில் பிர்மரந்திரம்என்ற த்வாதசாந்தத்தில் சாக்ஷிரூபனான பரதத்வத்தையும்,அதற்குப்பின் நான்குஅங்குலம் தள்ளி ஷோடசாந்தம் என்னுமிடத்தில் ஸ்வப்ரதிஷ்டிதரான லிங்கரூபியானமூர்த்தியையும உபாஸிக்கவேண்டும் என்றிருக்கிறது. ஆகவே சிவனுடைய ஆதாரஸ்தானமான இச்சரீரமே சிவலிங்கமாயிற்றென்று சொல்வதும் சரியே. கடைசியாக இச்சரீரமே சிவலிங்கமென்று சொன்னதும் யோகிகளுக்கே தவிற நமக்கில்லை. ஏனெனில் சரீரத்தின் ஒவ்வொரு ஸ்தானத்திலுள்ள கணேசன் பிர்மா விஷ்ணு ருத்திரன் பரதத்வம் லிங்கமென்னும் பரமாத்மாவை அறிவதற்குச் சொல்லியிருக்கும் ஸ்தானங்களை கவனிக்கப்புகின் அங்கு வாயுலோகமிருக்கிறது. அடுத்து வருணலோகம் என்றெல்லாம் சொல்லுகிறது. ஆகவே வாயுலோகத்தையும் வருணலோகத்தையும் அடையச் சக்தியுள்ளவனுக்கல்லவா அந்த உபதேசமென்றாயிற்று. ஆகவே நாம் ஆலயவழிபாடுடையவர்களாதல்பற்றிச் சிவலிங்கமென்றால் சிவனுடைய ஞாபகமென்றுகொண்டு அவனது ஞாபகமான பாணபிம்பாதிகளில் அவனை ஆராதித்தால் கடைசியில் நமக்குப் பலனளிக்க அவன் வருவான் என்பது உண்மை. ஆதல்பற்றியே

यो यो यां यां तनुं भक्तः श्रद्धयार्चितुमिच्छति ।
तस्य तस्याचलां श्रद्धां तामेव विदधाम्यहम् ॥
स तया श्रद्धया युक्तस्तस्याराधनमीहते ।
लभते च ततः कामान् मयैव विहितान् हितान् ॥

எவனெவன் எந்தெந்த மூர்த்தியை சிரத்தையோடு ஆராதிக்க விரும்புகின்றானே அவனவனுக்கு அந்தந்தமூர்த்தியில் அதே

சிரத்தையை வளர்ப்பேன். அவன் சிரத்தையோடு அம்மூர்த்தியினது ஆராதனத்தை விரும்புவான். பிறகு நானே அவனது விருப்பங்களை அம்மூர்த்தி ரூபமாய் அளிப்பேன் என்று கீதாசாரியரும் கூறினர். ஆஸ்திகர்களே! இதுகாறும் இங்குக் கூறிவந்த விஷயத்தில் சிவலிங்கமென்றதனால் சிவனைத்தான் ஆராதிக்கவேண்டும் என்றுமட்டும் சொன்னதாய் எண்ணிவிடக் கூடாது. சிவலிங்கமென்பதற்கு யோகரூடமாய் சிவனது லிங்கமென்றானபோதிலும் யௌகிகமாய்ப்பார்த்தால் சிவம்என்பதற்கு மங்களம்என்ற பொருளேற்படும். ஆகவே மங்களத்தைக்கொடுக்ககூடியது என்றாகும் உலகிலுள்ள நாம் எல்லோரும் இகபாமங்களரூபமான க்ஷேமத்தையே விரும்புகிறோம். அவ்விதமங்களத்தையளிக்கச் சக்தியுள்ள தைவம் யாவும் சிவமே. அத்தகைய சிவத்தைக்கொடுக்கக்கூடிய மூர்த்திகளெல்லாம் சிவலிங்கம் தானென்றுகொண்டால் ஒருவிரோதமும் ஏற்படாது. ஆதல்பற்றியே சிவ என்ற சப்தத்தைப்பற்றி

शेतेऽस्मिन्जगदीहते दिशति च श्रेयःप्रजानामसौ
शांतिं याति समस्तमङ्गलगुणग्रामैकसीमायते ।
इच्छाशक्तिमुपैति निर्मलतरश्चास्ते प्रकृत्येति च
व्याचष्टे शिवनाम यस्य विभवं तस्मै परस्मै नमः ॥

சிவம் என்ற இதனிடத்தில் உலகம் அடங்குகிறது. அதனிடத்தே உலகம் பிரியம்கொள்கிறது. இது பிரஜைகளுக்குக் கீர்த்தியையளிக்கிறது. தான் சாந்தமாயிருந்துகொண்டு நம்மையடையச்செய்கிறது. ஸமஸ்தமங்களகுணக் கூட்டங்களினிருப்பிடமாயிருக்கிறது, இச்சாசக்தியை அடைகிறது. இயற்கையிலேயே மிக நிர்மலமாயுமிருக்கிறது. இவ்விதம் சிவநாமத்தின் விபரம் பெற்றது. எந்தமூர்த்தியோ அந்த பரமூர்த்திக்கு நமஸ்காரமென்றூர். ஆகவே சிவத்தை விரும்பும் நாமெல்லோரும் சிவலிங்கத்தையே வழிபட்டு சிவத்தில் ஈடுபட்டு சிவமாய் இருப்போமென்பதை இதன் மூலம் வெளியிட்டுக் கொண்டேன். சிவம்.

M. N. சுப்பிரமணிய சாஸ்திரி.

# திருநாவுக்கரசர்.

(சகூ-வது பக்கத்தொடர்ச்சி)

பின்னர், உத்தர கைலாசத்திற்குச் செல்ல எண்ணினர், திருப்பருப்பதத்தை அடைந்தார். உணவு முதலாயின இன்றி நடந்தார். கால்கள் தேய்ந்தன. கைகளின் உதவியால் தாவிச் சென்றார். கைகளும் சிதைந்தன என்றாலும் ஆசை குறைய வில்லை. மார்பாலே நகர்ந்தார், அதன் தசையும் நைந்தது. எலும் புகளும் முறியலுற்றன. புரண்டு போவாராயினர். அப்பால் அதற்கும் இயலாதுபோக வழியிலே ஓரிடத்திலே கிடந்தார். அக்கால் ஆண்டவன்தோன்றி இவரது உறுதியைப் பலவாறு சோதனை செய்தார்; மகிழ்ந்தார். "நாவுக்கரச, எழுந்திரு" என்றார். உடனே ஆண்டவனது திருவருளால் அங்கமெலாம் முன் போலாயின. "நாவுக்கரச, இந்தத் தடாகத்திலே முழுகு, திருவையாற்றை அடை, அங்கே நம்மை வணங்கு" என்று மறைந்தார்.

திருநாவுக்கரசர் அங்ஙனமே பஞ்சாட்சரத்தை ஓதி அந்தத் தடாகத்திலே மூழ்கினர்; திருவையாற்றிலுள்ள ஒரு குளத்திலே தோன்றிக் கரையேறினர். ஆலயந்தோன்றிற்று. கைலாஸநாதரைக்கண்டு வணங்கச்சென்றார். ஆலயமும் ஆண்டுள்ள சராசரங்களும் கைலாஸமலையாகவும் சிவகணங்களாகவும் தோன்றின. உள்ளே சென்றார். கடவுளளித்த காட்சியைக்கண்டு களித்தார்; தாண்டகம் பாடினர். சின்னாள் அங்கேயே இருந்து பலதலங்களை வணங்கிக்கொண்டு திருப்பூந்துருத்தியை அடைந்தார்; அங்கே ஒரு திருமடத்தைக்கட்டுவித்தார். அக்கால் திருமறைக் காட்டிலிருந்துபிரிந்து பாண்டிநாட்டிற்குச் சென்ற திருஞான சம்பந்தர், அப்பர் இருப்பதை அறிந்து பூந்துருத்திக்கு அருகில் வந்தருளினர். அதையறிந்த அப்பர் எவரும் அறியாவண்ணம் எதிர்கொண்டு ஞானசம்பந்தரது முத்துச்சிவிகையைத் தாங்கிவருவாராயினர். வாகீசரைப் பார்க்கவிரும்பிய சம்பந்தர் "அப்பர் எங்குற்றார்" என்று வினவ அடியேன் தேவரீரைத்தாங்கும் பெருவாழ்வைப்பெற்று இங்குற்றேன் என்றனர் அப்பர். உடனே

சம்பந்தர் சிவிகையினின்றும் இறங்கினர். ஒருவரையொருவர் வணங்கிக்கொண்டனர். திருஞானசம்மந்தரால் பாண்டிநாட்டின் பெருமைகளைக்கேட்டு இன்புற்றார் திருநாவுக்கரசர்.

அப்பால், வாகீசர் பாண்டிநாட்டையடைந்து பலதலங்களையும் வணங்கிச் சோழமண்டலத்திற்குத் திரும்பினர்; திருப்புகலூரை அடைந்தார். அங்கேயே உழவாரத்திருத்தொண்டு முதலிய தொண்டுகளைச் செய்துகொண்டும், பலபதிகங்களைப்பாடிக் கொண்டும் இருந்தார். அங்கே, அப்பர் உழுங்கால் ஆண்டவனருளால் கற்களெல்லாம் பொன்னாகவும், நவரத்தினங்களாகவும் தோன்றின. அவற்றை அப்பர் பருக்கைக்கற்களோடு சமமாக எண்ணி எறிந்துவிடுவார். இங்ஙனமே வேறு சோதனைகளையும் ஆண்டவன் செய்தார். சித்தத்தைச் சிவன்பாலே வைத்தவாகீசர் அவற்றிற்கு மயங்கவில்லை. பின்னர் வாகீசர் பலதிருவிருத்தங்களைப்பாடிச் சித்திரைமாதமும் சதயநக்ஷத்திரமுங்கூடிய நன்னாளிலே "எண்ணுகேன் என்சொல்லி எண்ணுகேனோ" என்று தொடங்கிய திருத்தாண்டகத்தைப் பாடத்தொடங்கி தாண்டகந்தோறும் கடைசியில் "உன்னடிக்கே போதுகின்றேன்பூம்புகலூர் மேவிய புண்ணியனே" என்று அமைத்துப்பாடியருளினர். சிவபெருமானுடைய திருவடிநிழலையடைந்தார். இவர்பாடிய பதிகங்கள் 49000 கிடைத்த பதிகங்கள் 312.

தண்டமிழ்த் தொண்டன்.

---

# வரருசி.

---

(௬௩-வது பக்கத்தொடர்ச்சி.)

மந்திரித் தலைவரான அவரிடம் ராஜ்யபாரத்தை ஒப்புவித்த யோகநந்தன் ஐச்வர்யமதங்கொண்ட மனதுடையவனாய் அந்தப் புரத்திலேயே வஸித்துக்கொண்டு புலன்களாகிய இன்பமில்லாத

க்ஷணநேரத்தையும் ஸஹிக்கச்சக்தியற்றவனாய் வெகுதூரம்மோஹித்துப்போனதன்னையறிந்துகொள்ளவேயில்லை. அவ்விதமானநிலையிலுள்ள அவனைக்கண்டு வைராக்கியமடைந்த வரருசியானவர் அந்தோ தெய்வம் தடுக்கமுடியாதது. ஸகல சாஸ்திரங்களின் கரைகண்டவனும், சமயத்திற்குத் தக்கவாறு தோன்றும் புத்திசக்தியுள்ளவனும், சமம் தமம் முதலான ஆன்மகுணங்களுக்கு ஆச்ரயமாயிருந்தவனுமான அந்த இந்திரதத்தனெங்கே? போகங்களில் பற்றுள்ளவனும் விவேகமற்றவனும் கஜராஜன்போல் மதங்கொண்டவனுமான இந்த யோகநந்தன் எங்கே? திடீரென்று நேர்ந்த ஐச்வர்யம் யாரைத்தான் மோஹிக்கச்செய்யாது? என்பதற்கு முதல் த்ருஷ்டாந்தமான இவ்வரசன் தடங்கலின்றி ஸஞ்சரிக்கிறான். அவனதுகார்யங்களைச் சிந்திப்பதால் என்னுடைய ஸ்வதர்மம் கெடுகிறது. ஆகையால் இருளான கிணற்றில்விழுந்த அந்தச்சகடாலனையுயரக்கிளப்பி, ராஜ்ஜியகார்யத்தைப்பார்ப்பதில் துணையாகக் கொள்கிறேன் என நிச்சயித்து அரசனிடம் அறிவித்து மஹாமேதாவியான அந்தச்சகடாலனை மந்திரிபதவியில் அமர்த்தினர். 'அவனும் வரருசியிருக்கும்போது யோகநந்தனை ஜயிக்கமுடியாது' என்றறிந்து ஸந்தர்ப்பத்தைத் தேடிக்கொண்டு நீர் நொச்சியின் வியாபாரத்தையாச்ரயித்து ராஜ்பகார்யங்களை முன்போல் நடாத்திவந்தான்.

ஒருஸமயம் அரசன் வரருசியுடன்கூட கங்கைக்கரையில் ஸஞ்சரித்துக்கொண்டு எதிர்பாராமலே கங்கையின்நடுவில் விரிந்த ஐந்துவிரல்களையுடைய கையைக்கண்டான். இது என்னவென்று அவனால் கேட்கப்பட்ட மந்திரி தனது இரண்டுவிரல்களை அதே திசையில் காட்டினான். அக்கணமே கைமறைந்தபோது மிக்க ஆச்சர்யங்கொண்ட அரசனால் கேட்கப்பட்ட மந்திரி 'ஐந்துபேர் சேர்ந்தால் இந்தஜகத்தில் சாதிதுக்கொள்ளமுடியாதது என்ன இருக்கிறது' என்று புகழ்ந்த கையின்பொருட்டு 'ஒருமனதுடன் இருந்தால் இருவருக்கே ஆகமுடியாதது என்ன இருக்கும்' என்று என்னால் இருவிரல்கள் காட்டப்பட்டன என்று ரஹஸ்யவிஜ்ஞானத்தைப் பகர்ந்தார். அவருடைய உவமையற்ற புத்திஸாமர்த்தியத்தைக்கண்டு சகடாலன் வருத்தங்கொண்டான்.

ஒருவிஷயத்தில் பட்டணத்தின் பரிசோதனைக்கு அனுப்பப் பட்டு நடுநிசியில் அலைந்துவரும் ஒவ்வொரு தலையதிகாரியும் ஒவ்வொரு இரவிலும் நாசமடைந்தான். அதைக்கேட்டு நந்தனால் வாருசியே அக்கார்யத்தைப் பார்க்க ஏவப்பட்டார். அவரும் நடுநிசியில் அலைந்துகொண்டு எதிர்முகமாய் வருகின்ற ஓர் அரக்கனைக்கண்டு உன்கருத்து என்னவென்று வினவினார். அவனோ இந்நகரில் யார் மிக்கஅழகுள்ள பெண் ? என்று கேட்டான். அவ்வாருசியால் சிரித்துக்கொண்டு மூர்க்கனே எப்பெண் எப்புருஷனுக்குப் ப்ரியமாய்த் தோன்றுகிறளோ அவளே அவனுக்கு அழகுவாய்ந்தவளாவாள் என்று சொல்லப்பட்டது. ஸந்தோஷங்கொண்ட அவ்வரக்கன் நான் ஜயிக்கப்பட்டேன். இது முதல் தோழனான உனக்கு நினைத்தமாத்திரத்தில் எதிரே வருவேனென்று சொல்லிவிட்டு மறைந்தான்.

இவவிதம் வாருசியால் ஸாவதானமாய் ராஜ்யகார்யம் கவனிக்கப்பட்டுவரும்போது, அந்தப்புரத்தில் காமுகமூடனாய் வஸித்துவரும் யோகநந்தன், சாளரத்தின்வழியாய் உயர்முகமாய்ப்பார்க்கும் ஒரு வேதியனை உற்றுநோக்குகின்ற பட்டமஹிஷியைக் கண்டு விவேகத்திற்கு எதிரான அஸூயையால் மனங்கலங்கினவனாய்க் சினங்கொண்டு அவ்வேதியனைக் கொல்லக் கட்டளையிட்டான். அவ்வேதியன் அரசனுக்கிணைப்படி கொலைகளத்திற்குக் கொண்டுபோகும்போது சந்தை நடுவில் உயிரிழந்திருந்தபோதிலும் ஒருமீன் உன்னதமாய்ச் சிரித்தது.

அதையறிந்து அரசன் பிராம்மணவதத்தைத் தடுத்து மீன் சிரித்ததின்காரணம் தெரிந்து சொல்லப்படவேண்டும் என்று வாருசியைப்பிரார்த்தித்தான். பிறகு நினைத்தமாத்திரத்திலேயே அவனுக்குத் தோன்றின ஸரஸ்வதிதேவியானவள் காத்யாயனருக்குச் சொன்னதாவது–'குழந்தாய் இரவில்இப்பனைமரத்தின்கீழ் மறைந்திரு அப்போது மீன் சிரித்ததின்காரணத்தைக்கேட்பாய்'என்று. அப்படியே மந்திரி அவ்விடத்திலிருந்தபோது சிறுகுழந்தைகளோடு அங்குவந்த கோரமான ராக்ஷஸியொருத்தியைக்கண்டார் பக்ஷணத்தைக் கேட்கும் குழந்தைகளை உச்சிமுகர்ந்து அந்த

ராக்ஷஸீ காலையில் உங்களுக்குப் பிராம்மணனுடைய இறைச்சிகளைத்தருகிறேன். இப்போது அவன் கொல்லப்படவில்லை என்று சமாதானப்படுத்தினபோது 'ஏன் இப்போது அவன் கொல்லப்படவில்லை' என்று அவர்கள் கேட்க, அவன் கொலைக்களத்திற்கு கொண்டுபோகப்படும்போது இறந்துபோன மத்ஸ்யமும் நகைத்தது, அதனால் என்று சொல்ல மறுபடியும் நகைப்பின் காரணத்தைச்சொல் என்று கேட்கப்பட்டவளாய், பிள்ளைகளே! அந்தப்புரத்திலுள்ள ஸகலப்பெண்டீர்களும் நல்லநடத்தையில்லாதவர்கள், அங்கு எவ்விடத்திலும் புருஷர்கள் பெண்களின் வேஷத்தோடு ஸஞ்சரிக்கின்றனர். இதையறியாமல் இந்தப்போக்கிரியான காமுகஜடனால் குற்றமற்றபிராம்மணன் கொல்லப்படுகிறான்என்று சொன்னாள். அதையறிந்து வாருசி காலையில் யோகநந்தனுக்குச் சொன்னான். அவனும் பெண்வேஷங்கொண்ட புருஷர்களைத் தேடிக்கொன்றான்.

இவ்விதம் அரசன் விஷயமூடனாயிருக்க, வாருசியும் இவ்விதமான வேந்தனை ஸேவிப்பதை வெறுத்துக்கொண்டிருந்தார். அக்கால் கெட்டிக்காரனான ஒருசித்திரவேலைக்காரன் கொலுமண்டபம் வந்து யோகநந்தனுடையவும் அவன்மஹிஷியினுடையவும் பிரதிகிருதியை எழுதினான். பிறகு சந்தோஷங்கொண்ட பூபதியினிடமிருந்து ஏராளமான பொருளையும் பெற்றான். ஒருசமயம் அரசனைப்பார்க்க உட்சென்ற வாருசி, ஓரிடத்தில் அச்சித்திரத்தைக் கண்டு பூர்ணலக்ஷணத்துடன் சித்திரத்தில்எழுதப்பட்டதேவிக்கு மற்றொருலக்ஷணம் இருக்கவேண்டியதை யூகித்து, வர்த்திகையால் அவளுடைய இடுப்பில் ஓர் திலகம்போன்ற மச்சத்தையெழுதினார். அத்திலகம்போன்ற அடையாளத்தை மறுநாள் யோகநந்தன் கண்டு காத்தியாயனரால் எழுதப்பட்டதென்றறிந்து, மோஹங்கொண்ட இவன் ஐயமில்லாமலே கடத்தைப்பிசகுள்ளவனாய் எனது அந்தப்புரஸ்த்ரீகளைக்கொடுத்துவிட்டான். ஆகையாலேயேதான் பெண்டீர்வேஷங்கொண்ட புருஷர்கள் இவனால் அறியப்பட்டார்கள் என்று நிச்சயித்து கோபத்தால் ஜ்வலித்துக் கொண்டு 'இந்த வாருசி கொல்லப்படட்டும்' என்று சகடாலனுக்குக்கட்டளையிட்டான். மேன்மைதங்கின புத்தியுள்ள அச்சகடா

லஞே, இந்த வரருசி திவ்யமான புத்திமஹிமையுள்ளவர். எனது விபத்தைப்போக்கினவர். இவரைக்கொல்லத்தேவராலும் அஸுரராலும்முடியாது. மனிதர்களாலோ கேட்கவும்வேண்டுமா என்று மனதில் சிந்தித்துக்கொண்டு வரருசியைத் தனதில்லத்தில் மறைவாய் வஸிக்கும்படிசெய்து மஹாராஜனே! உமது கட்டளை நிறைவேற்றப்பட்டது என்று யோகநந்தனைக் களிப்புறச்செய்தான்.

இவ்விதம் வெகு இரவுகள் கடந்தபோது யோகநந்தனுக்குப் பட்டமஹிஷியிடம் ஜநித்த பதினெட்டுவயதுள்ள ஹிரண்யகுப்தன் என்ற குமாரன் தகப்பனுலும் தாயாராலும் அநுமதிக்கப்படாதபோதிலும்வேட்டையில்ஈடுபட்டமனமுள்ளவனுய்க்குதிரையில் ஏறி வேண்டிய சிலருடன் கூடிக்கொண்டு பெருங்காட்டில் நுழைந்தான். பிறகு ஒரு காட்டுப்பன்றியைப் பின்தொடர்ந்து ஒருவனுய் வெகுதூரஞ்சென்றுன். பகலும் கழிந்துவிட்டது. பெரும் இருட்டில் கோரமாக ஒலமிடும் துஷ்டவிலங்குகளின் கர்ஜ்ஜனையைக் கேட்பதாலேயே நடுங்கின அவ்விளவரசன் ஓர் பெரிய மரத்தில் ஏறிக்கொண்டான்.

பிறகு கணநேரத்திலேயே தன்னைப் பின்தொடரும் சிங்கத்தினிடமிருந்து பாதுகாத்துக்கொள்ள ஒருகாடியால் அம்மரம் ஏறப்பட்டிருந்தது. அருகிலே வந்தவனும் பயத்தால் உடல் நடுங்கினவனுமான அவனைக்கண்டு மடியில்வைத்துக்கொண்டு தோழனே? பயப்படவேண்டாம் என்று மானிடவார்த்தையால் அக்காடி பேசிற்று.

பிறகு மடியில் விச்வாஸத்தோடு தூங்குகின்ற அவனைக்கிழே தள்ளிவிடு என்று பூமியில் இருக்கும் சிங்கத்தால் வேண்டிக்கொள்ளப்பட்டும் அக்காடி தள்ளிவிடவிரும்பவேயில்லை. பிறகு விழித்துக்கொண்ட அரசகுமாரனின் மடியில் படுத்து அக்காடி தூங்கிற்று. சிங்கத்தால் தூண்டப்பட்ட ஹிரண்யகுப்தன் தயவில்லாமலே அக்காடியை பூமியில் தள்ளினுன். தெய்வச்செயலாய்விழிப்புக்கொண்ட அக்காடி தள்ளப்பட்டபோதிலும் விழவில்லை. ஆனுலும் கோபங்கொண்டு மித்திரத்ரோஹியே? 'இந்தக்கொடூரமான கார்யம் வெளியில் பிரகாசப்படுகிறவரையில் சித்தபிரமங்கொண்ட

வனுயிருப்பாய். என்றும் சபித்தது. காலையில் அரண்மனைக்குவந்த பித்தங்கொண்ட புதல்வனைக்கண்ட பூபதி வருத்தங்கொண்டு, சுகப்படுத்துவதற்கு உபாயமொன்றுமறியாதவனுய் 'இச்சமயம் வருசி பிழைத்திருந்தால் சித்தப்பிரமத்தின் காரணம் அறியப்பட்டிருக்கும்' அவனைக்கொல்லச்செய்த எனது புத்தியை நிந்திக்கவேண்டும். என்று தன்னை வெறுத்துக்கொண்டான். அருகிலுள்ள சகடாலன், ஆச்சர்யம் வாருசியை வெளிப்படுத்த சமயம் வாய்த்தது என்று யோசித்து அவ்வாசனுல் அபயமளிக்கப்பட்டு அரசனே; 'மஹாமேதாவியான இந்தவாருசியானவர் எனதுவீட்டில் ரஹஸ்யமாய் வைக்கப்பட்டிருக்கிருர் என்று அறியப்படுத்தி அவனது கட்டளையாலேயே உடனே வாருசியை வெளியில் அழைத்துவந்தான். வரும்போதே யோகநந்தனுல் குமாரனின் சித்தப்பிரமத்தின் காரணத்தைப்பற்றி கேட்கப்பட்ட வாருசியானவர் குமாரனை நன்ருய்ப்பார்த்து 'இவனுல் மித்திரத்ரோஹஞ்செய்யப்பட்டது' அதன் பலமான இந்தப்பைத்தியம் இவனுல் அநுபவிக்கப்படுகிறது என்று ஸரஸ்வதியின் அநுக்கிரஹத்தால் மறுமொழி கூறினுர். உடனேயே பைத்தியம் நீங்கின சுகமடைந்த ஹிரண்யகுப்தனுல் தனிமையில் அரண்ணியத்தில் முன் நடந்த வரலாறு முழுதும் கூறப்பட்டது. ஆச்சரியப்பட்ட அரசனுல் பூஜிக்கத்தக்கவரே! 'இது எவ்வாறு உம்மாலறியப்பட்டது என்று கேட்கப்பட்டகாத்தியாயனர் அரசரே! லக்ஷணங்களாலும் ஊஹத்தாலும் புதிது புதிதாகத்தோன்றும் பிரதிபாசக்தியாலும் சொல்லாமலே புத்திசாலிகளின் புத்திகள் அறிகின்றன. இதற்கு முன்னுல் என்னுல் திலகமறியப்பட்டதை திருஷ்டாந்தமாகக்கொள்க என்ருர். லஜ்ஜையும் அநுதாபமுங்கொண்ட மௌனமான யோகநந்தனுல் ஸம்மானிக்கப்பட்டு சரித்திரசுத்தி தனக்கு எற்படுவதாலேயே தன்னை தன்யனுகக்கருதின உபகோசாமனையாளனுன வாருசி வைராக்கியம்மேலிட்டு 'அறிவுள்ளவைகளிலும் மிக்க அறிவுள்ளதான வேந்தனின் அநுக்கிரஹம் எனக்கு வேண்டாம்' என்று சிந்தித்துக்கொண்டு தன்வீடுசேர்ந்தான். (தொடரும்)

கே. வி. சுப்பிரமணிய சாஸ்திரீ.